# ஒரு mRNA-தடுப்பு மருந்துடன் கூடிய பூஸ்டர் தடுப்பூசி

## (பைசெர்/பயோன்ரெக், மொடேர்னா)

**mRNA- தடுப்பூசிகள், நோயுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போது கடுமையான கோவிட்-19 எதிராக அடிப்படைப்பாதுகாப்புஎன பாதுகாக்கின்றன. எனவே 12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசியை பரிந்துரைக்கிறோம்.**

### பூஸ்டர் தடுப்பூசி ஒன்று எதற்காக?

பூஸ்டர் தடுப்பூசி மூலம், நோயெதிர்ப்பு கட்டமைப்பு நோய்க்கிருமியை நினைவூட்டு கிறது. தடுப்பூசி மூலமான பாதுகாப்பு கடுமை யாக நோய்வாய்படவிடாது பாதுகாத்து அதை நீடிக்கின்றது இது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்: தற்சம யம் உலாவும் வைரசின்னடி தடுப்பூசி பாதுகாப் பது குறைவு அத்துடன் தொற்றவிடாமலும் நோயின் விளைவை சிறிதாக்கவும் உதவுகிறது.

### பூஸ்டர் தடுப்பூசி யாருக்கு சிபார்சு செய்யப்படுகின்றது?

பூஸ்டர் தடுப்பூசி 12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் சிபார்சு செய்யப்படுகின்றது.
சுலபமாக கொரோனா வைரஸால் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு இது பரிந்துரைக்கப்படுகின்றது.:

- 65 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு
- 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்; நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்[1]
- கர்ப்பிணிப் பெண்கள்

### பூஸ்டர் தடுப்பூசி எப்போது மேற்கொள்ளப்பட வேண்டும்?

ஒரு mRNA- தடுப்பூசி மூலம் அடிப்படை நோய்த்தடுப்பு திடமாக்கப்பட்ட பின்பு 4 மாங்களுக்குப் பின் பூஸ்டர் தடுப்பூசி போட சிபார்சு செய்யப்படுகிறது. அடிப்படை நோய்த்தடுப்பு கீழ்வரும் சந்தர்ப்பங்களில்:

- ஒரு mRNA-தடுப்பு மருந்தினுடைய தடுப்பூசியின் இரண்டு டோஸ்களுக்குப் பின்னர்; அல்லது
- கொரோனா வைரஸால் உறுதிப்படுத்தப்பட்ட தொற்றின் பின்னர் + ஒரு mRNA தடுப்பு மருந்தின் தடுப்பூசி டோஸுக்குப் பிறகு குறைந்தது 4 வார கால இடைவெளியில் (வரிசைக் கிராமத்தில் தங்கி இல்லாமல்)

ஒரு முழுமையான அடிப்படை நோய்த்தடுப்பு ஏற்பட்ட பின்னர், கொரோனா வைரஸினால் தொற்று உறுதி செய்யப்படாதிருப்பின், பூஸ்டர் தடுப்பூசியைப் போடுமாறு பரிந்துரைக்கறோம். நோய்தொற்றயது என்பது காணக்ககூடிய பாதுகாப்பை தரும் எனறில்லை என புதிய ஆராய்சிதருகிறது. 4 கிழமைக்குப்பின்னர்: . நோய்ப்பட்டால் தடுப்பூசி போவும் (இதில் அவதானிக்கப்பட வேண்டியது குறைந்த இடைவெளியாக 4 மாதங்கள் கடைசிக் கோவிட் 19 தடுப்பூசி போட்ட பின்னர்).

### எவ்வாறான தடுப்பூசி மருந்து பூஸ்டர் தடுப்பூசி போடப்படுகிறது?

அடிப்படையாக எந்த மருந்தானாலும் பிரச்சனை இல்லை mRNA இரண்டு வகையான தில் எது கிடைக்கறதோ அதைப் பாவிக்கலாம்.
30 வயதுக்குட்பட்ட நபர்களுக்கு பின்வருவன சேரும்: 18 தொடக்கம் 29 வயதான நபர்களுக்கு பைஸர் / பயோன்ரெக் பூஸ்டர் தடுப்பு மருந்துக்கு முன்னுரிமை வழங்குமாறு சிபார்சு செய்யப்படுகின்றது. 12 தொடக்கம் 17 வயதான நபர்களுக்கு பைஸர் / பயோன்ரெக் பூஸ்டர் தடுப்பு மருந்து வழங்குமாறு சிபார்சு செய்யப்படுகின்றது. ஏனென்றால், மிகவும் அரிதான சந்தர்ப்பங் களில், தடுப்பூசி போட்ட சிறிது நேரத்திலேயே இதயத் தசை அல்லது பெரிகார்டியத்தில் வீக் கம் ஏற்படுகிறது. Pfizer/BioNTech இன் தடுப்பூசி யைக் காட்டிலும், மாடர்னாவின் தடுப்பூசியின் மூலம் தடுப்பூசி போட்ட பிறகு அவை சற்று அதி கமாகக் காணப்படுகின்றன. இது மிகவும் அரிதான பக்க விளைவு மற்றும் நன்கு நிர்வகிக் கப்படலாம். கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பிறகும் இத்தகைய அழற்சிகள் ஏற்படுகின்றன. இருப்பினும், பின்வரும் இரண்டு mRNA தடுப்பூசி களுக்கும் பொருந்தும்: 30 வயதிற்குட்பட்டவர் களுக்கு கூட, கோவிட் 19 தடுப்பூசியின் நன்மைகள் சாத்தியமான அபாயங்களை விட அதிகமாக இருக்கும்.

### நான் எங்கு தடுப்பூசி போடலாம்?

தடுப்பூசி போடுவதற்கு மாநிலங்களே பொறுப்பாகும். நீங்கள் எங்கு பதிவு செய்வது மற்றும் எங்கு தடுப்பூசி போடலாம் என்பதை இணையதளத்தில் அல்லது உங்கள் மாநிலத்தின் இன்போலைன் *(www.foph-coronavirus.ch/cantons*) இல் அறிந்து கொள்ளுங்கள். அல்லது உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் கேளுங்கள்.

### யாருக்கு மேலும் பூஸ்டர் தடுப்பூசி (ஏற்கனவே நிர்வகிக்கப்பட்ட முதல் பூஸ்டர் தடுப்பூசிக்குப் பிறகு) பரிந்துரைக்கப்படுகிறது?

80 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தற்போது மற்றொரு பூஸ்டர் தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது.

[1] நோய்களின் விரிவான பட்டியலைக் கீழே காணலாம்: அதிக ஆபத்தில் உள்ளவர்களின் வகைகள் (PDF, 205 kB)

கடுமையான பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு உள்ளவர்களுக்கு (நோய் அல்லது மருந்து காரணமாக) மேலும் பூஸ்டர் தடுப்பூசியை பரிந்துரைக்கிறோம் - இந்த விஷயத்தில், உங்கள் மருத்துவரை தொடர்பு கொள்ளவும்.

கடைசி தடுப்பூசி போட்ட 4 மாதங்களுக்குப் பிறகு மற்றொரு பூஸ்டர் தடுப்பூசி போடலாம். இது மீண்டும் ஒரு தீவிர நோய்க்கு எதிராக தடுப்பூசி பாதுகாப்பை அதிகரிக்கிறது, குறைந்தபட்சம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு.

கடைசியாக தடுப்பூசி போட்டதில் இருந்து நீங்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப் பட்டுள்ளீர்களா? இந்த நோய்த்தொற்றிலிருந்து கடுமையான நோய்க்கு எதிரான உங்கள் பாது காப்பு கணிசமாக அதிகரிக்கவில்லை என்ப தால், நீங்கள் மற்றொரு பூஸ்டர் தடுப்பூசியைப் பரிந்துரைக்கிறோம். நோய்த்தொற்றுக்குப் பிறகு 4 வாரங்களிலிருந்து நீங்கள் தடுப்பூசி போடலாம் (கடைசி கோவிட்-19 தடுப்பூசிக்குப் பிறகு 4 மாதங்களின் குறைந்தபட்ச இடைவெளி யைக் கணக்கில் எடுத்துக்கொள்வது).

**அடிப்படை நோய்த்தடுப்பு போலவே பூஸ்டர் தடுப்பூசிக்கும் மீதமுள்ள தகவல்கள் ஒரே மாதிரியானவை என்பதுடன்** *«mRNA- **தடுப்பு மருந்துடன் கூடிய கோவிட்-19 தடுப்பூசி பற்றிய பொதுவான தகவல்கள்**»* **என்ற துண்டுப்பிரசுரத்தில் இவற்றை வாசித்தறிந்து கொள்ள முடியும்.**